Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 06-08 |
|---|---|

வேணு : 14 நவம்பர் 2008 கானம் : 4



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalavani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar

Related Websites : www.madhuramurali.org / www.namadwaar.org
E-mail : contact@madhuramurali.org; publications @madhuramurali.org


NO FAME
NO SELF INTEREST
ONLY GOD
NO NAME

ஸ்ரீ ஹரி:
[illegible] ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஸ்ரீ திரிவேணிகிரி ஸ்வாமிகள்-தபோவனம்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

| வேணு : 14 | அக்டோபர் 2008 | கானம் : 4 |
|---|---|---|

www.madhuramurali.org / www.namadwaar.org





மேலே இடது. பின் அட்டைப்படம் அக்டோபர்11 விஜயதசமி அன்று சென்னை ப்ரேமிகபவனம் ஸ்ரீஸ்ரீனிவாசபெருமாளின் அவதார உத்ஸவம் நடைபெற்றது

வலது-ப்ரேமிகபவனத்தில் நடைபெற்ற 100வது பாகவத சப்தாஹத்தில் ஸ்ரீஸ்வாமிஜியுடன் பக்தர்கள்.



திருநாங்கூர் ஸ்ரீவண்புருஷோத்தமன் திருக்கோவில் ஸம்ப்ரோக்ஷணம் செப்டம்பர்11, 2008 அன்று விமரிசையாக நடந்தது. மேலே – கோவில் பின்னணியில் அழகே உத்ஸவ பெருமாள், திருமஞ்சனத்தின் பொழுது. கீழ் – திருமதி மற்றும் திரு.ரத்னகோபால் அவர்களது குடும்பம் இத்திருப்பணியை ஏகதேசமாய் செய்து கொடுத்தது. விவரம் 31ம் பக்கம்



பெங்களூர் ராமமூர்த்தி நகர் ஸ்ரீஸௌந்தர ஆஞ்சநேயஸ்வாமி கோவில் நவராத்திரியை ஒட்டி விழாக்கோலம் பூண்டிருந்தது



NO FAME
NO NAME
NO SELF INTEREST
ONLY GOD


ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

"ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே"

வேணு : 14 | நவம்பர் 2008 | கானம் : 4



- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.


## இந்த இதழில் ...


| | |
|---|---|
| ரமணாஸ்ரம கடிதங்களிலிருந்து | 02 |
| மதுரமான மஹனீயர் – 153 | 04 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 09 |
| பாகவத பழம் –4 | 11 |
| ஸ்ரீதிருவேணிகிரி ஸ்வாமிகள் | 14 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 22 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 25 |
| மாலே மணிவண்ணா – 67 | 27 |
| அக்ஷரமணமாலை – 151 | 29 |
| ஸ்ரீவண்புருஷோத்தமன் சன்னதி – நாங்கூர் | 31 |



- Advertisements in Madhuramurali are invited.
- We request all subscribers to renew subscriptions promptly
- Subscribers are requested to extend the benefit of Satsangham to their friends/relatives by introducing them to "Madhuramurali"
- For details please call +91-44-24895875

## ரமணாஸ்ரம கடிதங்களிலிருந்து .. ஹ்ருதயம்

"எப்படி பிரபஞ்சமெல்லாம் சிருஷ்டியின் நடுவிலிருந்து பிறந்து, இருந்து, அதிலிருந்து பெறும் சக்தியாலும் திறனாலும், செயல்படுத்தப்படுகிறதோ அதைப் போன்றே பூத உடலின் உள்ளேயும் மையமாக ஒன்றுண்டு. அதிலேதான் நமது இருப்பும் உள்ளது. மனித உடலின் மையம் இந்த சிருஷ்டியின் மையத்தினின்று வேறுபட்டதல்ல. இதுதான் இதயம். சுத்த உணர்வின் இருப்பிடம் சத்சித்தானந்தமாகும். நமக்குள் ஒளிரும் ஈசனின் இருப்பிடம் எனப்படுவதும் இதுவே. இந்த இதயம், உடலின் இடப்பக்கத்திலிருந்து ரத்த ஓட்டத்தை சீர்ப்படுத்தும் இதயத்தினின்று வேறுபட்டது. பொதுவாக அறியப்படாத இது, மார்பின் வலப்பக்கம் ஒளிர்கின்றது. 'நான்' எனும் பொருளின் இருப்பிடமாகவும், 'நான்' எனும் அகந்தையான எண்ணத்தின் பிறப்பிடமாகவும், ஒடுங்கும் இடமாகவும், உணர்வு ஒளிரும் ஸ்தானமாகவும், இதுவே விளங்குகிறது.

இதயத்தை, சரீரத்தின் ஒரு அங்கத்தில், 'அஹம்' என்பதன் இருப்பிடமாகச் சொல்லும், மேற்படி விளக்கத்தால், குழப்பம் ஏற்பட வாய்ப்புண்டு. உடலுக்குள் மையம் கொண்டு விளங்கும் சுத்த உணர்வு, சரீரம் சம்பந்தப்பட்டிருந்தாலும், சாரீரிகமானதல்ல.

'ஹிருதயம்' எனும் சொல் ஹிருத்+அயம் என பிரியும்; மையம் இது. ஒரு கலவையான சொல். இந்த இதயத்தையே தியானத்தின் பயனாக அடைகிறோம். வலப்புறம் ஒளிரும் இதிலிருந்து பிறந்த உணர்வு சுஷும்னா நாடி மூலம் சஹஸ்ராரத்தை அடைந்து, அதிலிருந்து நாடிகள் மூலம் உடல் எங்கும் பரவ, நாம் புற உலகில் பொருள்களை உணர்கிறோம். இப்புற உணர்வையே உண்மையென்று மாயையின் செயலால் நம்பிய மனிதன் துன்பமடைகின்றான், எல்லாம் எதிலிருந்து பிறந்து

விளங்குகின்றனவோ, அதுவே ஹ்ருதயம். ஆழந்த உறக்கத்திலும், எதிர்பாராத அளவு கடந்த சந்தோஷத்திலும், துக்கம், பயம் அல்லது திருப்தியிலும் நாம் இந்த இதயத்துள் அடங்குவதால்தான், புற உணர்வு அற்று விடுகிறது. தியானத்தின் மூலமோ, விசார மார்க்கத்திலோ, அதே 'நான், நான்' என்று பிரகாசிக்கும் இதயத்தைச் சென்று அடைந்தால் அதுவேயாகிறோம்.

> ஆழ்ந்த உறக்கத்திலும், எதிர்பாராத அளவு கடந்த சந்தோஷத்திலும், துக்கம், பயம் அல்லது திருப்தியிலும் நாம் இந்த இதயத்துள் அடங்குவதால்தான், புற உணர்வு அற்று விடுகிறது.

வந்த வழியே திரும்பிச் சென்று எண்ண அலைகள் ஓய்ந்தொடுங்கினால் அங்கு 'நான், நான்' என்று ஸ்புரண அதிர்வு உண்டாகிறது. இதுவே சுத்த சைதன்ய பிரகாசத்தின் முன்னோடி. ஆனால் இது முடிவு அல்ல. இந்த ஸ்புரணம் உதிக்கும் இடத்தை இடைவிடாது கூர்ந்து நாடினால், எல்லையற்ற அத்வைத (இரண்டற்ற) உணர்வு தானாக, ஒன்றேயாக ஒளிரும்.

மூச்சை அடக்குவதும் மனதை அடக்கி உள்முகமாக திருப்புவதற்கு ஒரு வழி. திரும்பிச் சென்று உள்ளுக்குள் மறையும் எண்ணங்கள் லீனமாகும் இடமே இதயம்.

நன்றி - ரமணாச்ரம பதிப்பகம்

> அனுக்கிரகம் சதா நிகழ்ந்து கொண்டு தான் இருக்கிறது. அனுக்ரகிப்பதென்பது ஒரு தொழிலல்ல. அது நிரேதுகமாகவும்(காரணமின்றி) இயல்பாயும் இடையறாது நிகழ்வது. அகமுகமாய் சிரத்தையோடு செய்யும் நிரந்தரத் தியானத்தால் அனுபவமாவது. மற்றைப்படி இப்படியென்றும் அப்படியென்றும் இது விவரிக்கக் கூடியதன்று.
>
> பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷி

## மதுரமான மஹனீயர் – 153

(Dr. ஆ.பாக்யநாதன்)

பகவானுடைய முக்கியமான இரண்டு அவதாரங்கள் வடஇந்தியாவில் ஏற்பட்டன. ஒன்று அயோத்தியில் நிகழ்ந்த ராமாவதாரம். மற்றொன்று மதுராவில் நிகழ்ந்த க்ருஷ்ணாவதாரம். ஏன் அந்த இரண்டு முக்கியமான அவதாரங்கள் வடஇந்தியாவில் ஏற்பட்டன? தமிழ்நாட்டில் அர்ச்சாவதாரங்கள் அதிகம். தென் இந்தியாவில்தான் திவ்ய தேசங்கள் அதிகம். அர்ச்சாவதாரங்கள் அதிகமான தென் இந்தியாவில், தாம் பிறக்காமல், சற்று balance செய்வது போல், வட இந்தியாவில் பகவான் அவதரித்தார் போலும். மேலும், பத்து அவதாரங்களின் முதல் அவதாரமான மத்ஸ்ய (மீன்) அவதாரமும் ஒரு பாண்டிய ராஜாவை முன்னிட்டு வைகை ஆற்றங்கரையில்தான் தோன்றியது. அது போல் கடைசி அவதாரமான கல்கியும், மேலும் பல ஆயிர வருடங்கள் கழித்து, தாமிரபரணி நதிக்கரையில் திருநெல்வேலி மாவட்டத்தில்தான் ஏற்பட போகின்றது. முதலும், முடிவும் தமிழ்நாட்டில் தான்!

பகவான், மனிதர்களுடன் கலந்து பழக வேண்டும் என்று ஆசைப்பட்டு, பூமியில் பிறந்தாலும், அவனை புரிந்து கொள்ளாதவர்களுடனும், அவனை புண்படுத்துபவர்களுடனும், எதிர்ப்பவர்களுடனும் பழக வேண்டியிருந்தது. தன்னிடம் பிரியமாயிருப்பவர்கள் வந்தால் மட்டும் பேசி பழகினால் போதும், மற்றவர்கள் வந்தால் கல் போல் இருக்க வேண்டும். அப்படி ஒரு அவதாரம்தான் அர்ச்சாவதாரம். அப்படி பகவான், அர்ச்சாவதாரம் எடுக்க ஸங்கல்பித்து, எடுத்த முதல் அவதாரம் திருவேங்கடமுடையானுடைய அவதாரம்.

வேதத்திலேயே, இரண்டு க்ஷேத்ரங்களைப் பற்றித்தான் வருகின்றது. ஒன்று திருவேங்கடம், மற்றொன்று பூரி ஜகந்நாதம். திருவேங்கடமுடையான் அர்ச்சாவதாரமாக எழுந்தருள போகின்றான்

என்றவுடன், அதற்கு முன்பாக அவதாரம் செய்ய ஆசைப்பட்டது ஆதிசேஷன். 'நின்றால் குடையாய், இருந்தால் சிங்காசனமாய், கிடந்தால் படுக்கையாய்' என்று இருக்கும் ஆதிசேஷன், அதுவும் போதாது என்று மலையாக ஆவிர்பாவம் ஆனார். யார் ராமாவதாரத்தில் லட்சுமணனோ, யார் க்ருஷ்ணாவதாரத்தில் பலராமனோ அவரே தான் திருமலையாக உள்ளார். இந்த மலை ஸ்வர்ணமுகி நதிக்கரையில் உள்ளது. ஸ்ரீசைலம், அஹோபிலம், காளஹஸ்தி போன்ற மஹா க்ஷேத்ரங்கள் இந்த மலையின் ஒரு அங்கமே.

எப்படி மஹாபிரபுவால் கோவர்த்தனத்தின் மீது தனது கால்களை வைத்து ஏறமுடியவில்லையோ, அதுபோல் ராமானுஜராலும் இந்த மலை மீது தனது கால்களை வைக்க முடியவில்லை. முழங்கால்களை கட்டி கொண்டேதான் கரடுமுரடான அந்த மலைகளில் ஏறினார். அவர் அப்படி மலை ஏறி வருகின்றார் என்பதை கேள்விப்பட்டவுடன், அவருடைய மாமாவும், திருமலையிலேயே வாஸம் செய்பவருமான திருமலைநம்பி ராமானுஜரை எதிர்கொண்டு அழைக்க வந்தார். ராமானுஜரை பார்த்து, "தேவரீர் இப்படி ஏறி வந்தால் நாளை யாருமே தங்கள் கால்களால் மலை ஏறி வர அச்சப்படுவார்கள். எம்பெருமான் எதற்கு அர்ச்சாவதாரம் எடுத்தானோ, அதன் பலன் வீணாகிவிடும். அசேதனர்களுக்கு அவன் கிருபை இல்லாமல் போய்விடும். ஆகவே பிடிவாதத்தை விட்டு, தேவரீர் மலை ஏறி வர வேண்டும்" என்று ப்ரார்த்திக்க, ராமானுஜரும் அவ்வண்ணமே செய்ய சம்மதித்தார். அப்பொழுது ராமானுஜர், திருமலைநம்பியை பார்த்து "இதை தெரிவிக்க தேவரீரே வர வேண்டுமா? திருமலையில் உள்ள ஒரு சிறியோனிடம் சொல்லி அனுப்பியிருக்கலாமே" என்று கூற, அதைக் கேட்ட திருமலைநம்பியோ, "நானும் அப்படித்தான் நினைத்தேன். திருமலையில் என்னைத்தவிர சிறியவன் யாரும் என் கண்களுக்குப் புலப்படாததால் நானே நேரில் வந்தேன்" என்று கூறி பரம வினயத்தை வெளிப்படுத்தினார். அந்த இடத்திற்குத்தான் முழங்கால் முடிச்சு என்று

பெயர்.இந்த ஏழு மலைகளுக்கும் ஏழு பெயர்கள் உண்டு. அதற்கான காரணங்களையும் ஸ்தல புராணம் கூறுகின்றது. அதில் முக்கியமானது அஞ்ஜனா பர்வதம். இந்த பர்வதத்தில்தான், ஸாக்ஷாத் ஹனுமார், அஞ்சனா தேவியிடம் அவதரித்தார். எட்டு காடுகளைக் கொண்டது இந்த பிரதேசம். இன்றும் அதனால் தான் வட ஆற்காடு, தென் ஆற்காடு என்று மாவட்டங்களுக்கு பெயர்கள் வழங்குவதை பார்க்கின்றோம். இதை ஆட்சி செய்த தொண்டை மண்டல சக்கரவர்த்திக்கு திருவேங்கடமுடையான் ப்ரத்யக்ஷம். இங்குள்ள ஒரு பாம்பு புற்றில் இருந்துதான் வராஹ ஸ்வாமியும், பெருமாளும் ஆவிர்பவித்தனர். தொண்டைமான் சக்கரவர்த்தியிடம், ஒரு அஸுரனை வதம் செய்யும் பொருட்டு பெருமாள் தன்னுடைய சங்கையும், சக்கரத்தையும் கொடுத்துவிட்டார். அஸுரனை வதம் செய்து விட்டு மீண்டும் அவைகளை அவன் திரும்பி தந்தபொழுது பெருமாள் அதை ஏற்கவில்லை. அதை மலையில், எங்கெங்கு வைக்கின்றாயோ, அங்கங்கு ஒரு தீர்த்தம் ஏற்படும். அதற்கு சங்கு தீர்த்தம், சக்கர தீர்த்தம் என்று பெயர் ஏற்படும் என்று கூறி அருளினார்.

காலி என்றால் காற்று அல்லது வெற்றிடம் என்று பொருள். மலை ஏறும் பொழுது ஒரு இடத்தில் நன்றாக காற்று வரும். அதனால், அதற்கு காலி கோபுரம் என்று பெயரே தவிர, அது காளி தேவியை குறிப்பதன்று. ராமானுஜர் இந்த மலையில் தங்கியிருந்து, ராமாயணம் பாராயணம் செய்தார். அப்படி இருக்கும் பொழுது தினமும் ஒரு கிழவி ராமானுஜருக்கு மோர் கொண்டு வந்து கொடுத்தாள். கிளம்பும்பொழுது, அவளுடைய கணக்கு என்ன என்று பார்த்து ஒருவரை பணம் கொடுக்க ஏற்பாடு செய்தார். அதற்கு அந்த கிழவி சண்டைக்கே வந்துவிட்டாள். "நீங்கள் மோக்ஷம் கொடுப்பீர்கள் என்று தான் மோர் கொடுத்தேனே தவிர, காசு கொடுப்பீர்கள் என்று தரவில்லை" என்று கூறினாள். அதைக் கேட்டு, ஆச்சர்யம் அடைந்த ராமானுஜர், அந்த கிழவிக்கு வைகுண்டம் அருள சொல்லி வேங்கடமுடையானுக்கு ஒரு சீட்டு கொடுக்க அதுவும் அப்படியே நிகழ்ந்தது.

ராமானுஜருடைய ஆசையை பூர்த்தி செய்ய அனந்தாழ்வார் தன்னுடைய நிறைமாத கர்ப்பிணி மனைவியுடன் திருமலை மேல் நந்தவனம் அமைத்து, புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார். அவருடைய கைங்கர்யத்தில் பங்கு கொள்ள ஆசைப்பட்ட ஸ்ரீநிவாஸனோ ஒரு சிறுவன் ரூபத்தில் வந்தார். கைங்கர்யத்தை உரிமையுடன் கேட்டு சிறுவன் மண்வெட்டியை பிடுங்கினார். அனந்தாழ்வாரோ கைங்கர்யத்தை பிறருக்கு விட்டுத்தர மறுத்தார். கடைசியில் சிறுவனுடைய முகவாய் கட்டையில் அடியேற்பட்டது. அதேநேரம் வேங்கடமுடையான் அர்ச்சாவதார திருமேனியிலே இரத்தம் வருவதைக் கண்டு அர்ச்சகர்கள் செய்வதறியாது திகைத்தனர். அப்பொழுது பெருமாளே, அர்ச்சகர்மேல் ஆவிர்பவித்து "அனந்தாழ்வார் கால்பட்ட நந்தவனத்தின் மணலை அந்த இடத்தில் வைக்க அது நிற்கும்" என்று கூறி அருளினார். அதன் பிரதிநிதியாகத்தான் இன்றும் ஸ்ரீபாதரேணு என்ற பெயரில் பச்சை கற்பூரம் வைக்கப்படுகின்றது.

> கோபுரம், கொடிமரம், பலிபீடம் எதுவும் இல்லாமல் பரம சௌலப்யத்துடன் ஸம்ஸாரிகள் போன்று அவனும் ஒரு வீட்டின் மாடியில் குடிகொண்டு எல்லோருக்கும் அருள்பாலிப்பதுதான் இவனுக்கு இருக்கும் தனி சிறப்பு ஆகும்.

தியாகராஜ ஸ்வாமிகள் இந்த பெருமாளை ஸேவிக்க வந்தபொழுது திரை போடப்பட்டிருந்ததால் திரை விலக வேண்டி ஒரு கீர்த்தனை பாட திரை விலகியது. முத்துஸ்வாமி தீக்ஷிதர் தன்னுடைய ஸகோதரனுக்கு கண் பார்வை வேண்டி ப்ரார்த்தித்துப்பாட, கண் பார்வை கிடைத்தது.

பெரியவாச்சான் பிள்ளை, புரந்தரதாஸர், வாஸுதேவ பரப்ரும்மம், விஜயகோபால ஸ்வாமிகள் போன்ற எண்ணற்ற மஹான்களுக்கு இங்கு விசேஷ அனுபவங்கள் ஏற்பட்டுள்ளது. பத்து ஆழ்வார்கள் இந்த பெருமாளை பாடி உள்ளார்கள். க்ருஷ்ணாவதாரத்தின் பெருமாளான பகவான் கோகுலம், ப்ருந்தாவனம், மதுரா, துவாரகா நகரங்களில் பலருடைய வீடுகளுக்கு சென்றான், தூது போனான். பிறருக்காக

உழைத்தான். ஆனால் பண்டரீபுரத்தில் இருக்கின்ற பாண்டுரங்கனோ, அர்ச்சா திருமேனியில் இருந்து கொண்டே பல பக்தர்களின் வீட்டிற்கு சென்றும் அவர்களுக்காகவும், ஓடி ஓடி உழைத்தான். அதுபோல் விஜயதசமியும், புரட்டாசி சிரவணமும் ஆன இன்றைய தினந்தான் திருமலையில் திருவேங்கடமுடையானின் ஆவிர்பாவ நாள். அதே நாளில்தான் நமது ப்ரேமிகபவன ஸ்ரீநிவாசனும் ஆவிர்பவித்தான். கோபுரம், கொடிமரம், பலிபீடம் எதுவும் இல்லாமல் பரம சௌலப்யத்துடன் ஸம்ஸாரிகள் போன்று, அவனும் ஒரு வீட்டின் மாடியில் குடிகொண்டு எல்லோருக்கும் அருள்பாலிப்பதுதான் இவனுக்கு இருக்கும் தனி சிறப்பு ஆகும். செப்டம்பர்11-விஜயதசமி அன்று ஸ்ரீஸ்வாமிஜி மாலையில் உபன்யாசம் செய்தபொழுது மேற்கண்ட அரிய தகவல்களை தெரிவித்திருந்தார்கள்.

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

Zaah
TECHNOLOGIES

OUR SOLUTIONS

- SEARCH ENGINE OPTIMIZATION
- WEB MARKETING
- SOFTWARE DEVELOPMENT
- WEB DEVELOPMENT

M/s. Zaah Technologies India Pvt. Ltd.,
KD Marina Bay, No.75 & 77, Ground Floor,
Santhome High Road, Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313
E-mail: contact@zaahindia.com

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி : கர்மாக்களை ஜடம் என்றும், தானே பயன் தராது என்றும் இறைவன் அருளால்தான் பலன் ஏற்படும் என்கின்றார்களே வேதாந்திகள்.?

பதில் : வேதாந்திகள் கைக்கொள்ளும் ஜபம், தியானம், யோகம் எல்லாமும் கூட ஜடம் தான். ஏனென்றால் அவைகளும் கர்மாக்கள் தான். ஈஸ்வரனும் அவனுடைய அருளும் மட்டுமே சைதன்யம். அதுபோல், பகவானுடைய நாமமும் சைதன்யமானதே.

கேள்வி : துரியாதீதம் என்றால் என்ன நிலை?

பதில் : அக்ஞானிகளுக்கு மூன்று அவஸ்தை. அவை விழிப்பு என்ற ஜாக்ரத். தூக்கம் என்ற ஸுஷுப்தி. கனவு என்ற ஸ்வப்னம். இதையும் தாண்டி ஸித்திப்பது ஸமாதி. அந்த நிலையில் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி (கனவு, நினைவு, தூக்கம்) என்ற மூன்று நிலைகள் கிடையாது. அதற்கு துரியம் என்று பெயர். அப்பொழுது அவர்களுக்கு ஒரே ஒரு அனுபவம். அது பிரும்மானுபவம். அத்தகைய ஒரே நிலையில் இருக்கக்கூடிய ஞானிகள் திடீர் என்று ஒரு காட்சியை காண்கின்றார்கள். அதைத்தான் துரியாதீதம் என்கின்றார்கள். ஒரே பிரம்மானுபூதியில் திளைத்திருக்கும் ஞானிக்கும், அவ்வப்போது ஏற்படும் திவ்ய அனுபவ நிலைக்கு, துரியாதீதம் என்று பெயர்.

கேள்வி : ஸஹஜ ஸமாதி என்றால் என்ன?

பதில் : உயர்ந்த ஸமாதி நிலை கை கூடிய ஞானிக்கு பிறகு உலகத்துடன் கலந்து பழகுவது, மிகவும் கடினமாக இருக்கும். ஸமாதிக்கு போவதும் வருவது மாக இருக்கும் நிலை மாறி

ஸமாதியில் இருந்து கொண்டே புறஉலக சிந்தனையும், இருக்க பழகிக் கொள்ளும் நிலைக்கு ஸஹஜ ஸமாதி என்று பெயர்.

கேள்வி : யோக ஸூத்ரங்களில் சொல்லியிருக்கிற சக்கரங்கள் போல் வேதாந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கிறதா?

பதில் : வேதாந்திகளுக்கு ஹ்ருதய ஸ்தானத்தின் கீழே வயிற்று பாகத்திற்கு மேலே ஆறு இடங்களும், அதில் இருக்கும் அங்கங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. வேதாந்திகள் சொல்லும் ஹ்ருதயம் வலது பாகத்தில் உள்ளது. அங்கு ஒரு கவிழ்ந்த தாமரை நிலையில் ஹ்ருதயம் உள்ளது. அங்குதான் ஆத்ம சைதன்யம் இயங்குகின்றது.

பெற்றோர்கள் இல்லாத ஒரு குழந்தையை, அவனுடைய உறவினர்கள், அவனை வளர்க்க இஷ்டம் இன்றி வீட்டை விட்டு துரத்தினார்கள். அவனோ படிப்பறிவில்லாதவனாகவும், உடல் பலமில்லாதவனாகவும் இருந்தான், அவனிடம் எந்த சாமர்த்தியமும் இல்லை. வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட அவனை, காப்பாற்றுவதற்கும் யாரும் முன்வர வில்லை. அவனாலும் தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. அவன் பெரும் துயரத்திற்கு ஆளானான். பெற்றோர்கள் இருந்து ஒரு குழந்தையை காப்பாற்றி வந்தாலும் கூட, அவனுக்கு உலக வாழ்க்கை வாழ்வதற்கு வேண்டிய கல்வி, பொருள், பலம், அறிவு, இவைகள் இருக்குமானால், அவன் வீட்டை விட்டு தானாக வெளியேறவும் துணிந்து விடுவான். தன்னை இனி தன் பெற்றோர்கள் தான் காப்பாற்ற வேண்டும் என்று எதிர்பார்த்து இருக்க மாட்டான்.

அதுபோல், மறு உலகத்திற்கு வேண்டிய இறைவனுடைய அருளை சம்பாதித்துக் கொள்ளாமல், ஒருவனை மரணம் இந்த உலகத்திலிருந்து வெளியேற்றுமானால், அவன் மறுஉலகத்திற்கு சென்று, எந்த சாமர்த்தியமும் இல்லாதவன் இந்த உலகத்தில் துயரப்படுவது போல், அந்த உலகத்தில் துயரப்படுவான். ஆனால் அருளை சம்பாதித்து கொண்ட ஒருவன் மரணத்தை தைரியமாக எதிர்கொள்வான். ஏனென்றால், மறுஉலக வாழ்க்கைக்கு வேண்டிய அருள் அவனிடம் உள்ளதால், அது அவனுக்கு சுகமாகவே இருக்கும், என்று அவனுக்கு தெரியும்.

-ஸ்ரீஸ்வாமிஜி

## பாகவத பழம்

– ஸ்ரீஸ்வாமிஜி

4

மாயவரம் பெரியவாள் என்றொரு மஹாத்மா இருந்தார். மாயவரம் ரயில்நிலையத்தில் பைத்தியம் போல் அமர்ந்திருப்பார். அந்த காலத்தில் ரயிலிலிருந்து யாராவது இறங்கி மாட்டு, குதிரை வண்டிகளில் செல்வார்களானால், வண்டியின் பின்னால் உள்ள கம்பியை பிடித்துக் கொண்டு, பாகவதம் சொல்லிக்கொண்டே போவார். வண்டிக்காரன் அவருடைய அருமை தெரியாமல் சாட்டையால் அடித்து விரட்டுவான்.

முடிகொண்டானில் ஸித்தியாகியுள்ள ஆலங்குடி ஸ்வாமிகள் ஸ்ரீமத் பாகவத ஸ்வரூபமாகவே வாழ்ந்தவர். ஸ்ரீமத் பாகவதத்தை பாராயணம் செய்து கொண்டிருக்கும்பொழுது, ஏழாவது ஸ்கந்தம் வந்தது. அதில் ஹிரண்யகசிபு தன்னுடைய குழந்தையான பிரஹ்லாதனைப் பார்த்து "நீ படித்த பாடத்தில் கொஞ்சம் சொல் கேட்போம்" என்று சொல்லும் கட்டம். அதற்கு பிரஹ்லாதன், "ஸம்ஸாரம் ஒரு கூபம்(சாக்கடை). இதை விட்டு காட்டிற்கு சென்று ஏகாந்தத்தில் ஹரியை பஜனை செய்ய வேண்டும், அதுதான் நான் படித்ததின் ஸாரம்" என்று வருகின்றது. ஸ்வாமிகள் பார்த்தார். தினமும் பாகவதத்தை படித்துவிட்டு எப்பொழுதும் போல் வாழ்ந்து கொண்டு இருந்தால் என்ன பலன்? யோசித்தார். வாழ்க்கையைத் துறந்தார். திகம்பரராக சஞ்சரித்தார். ஒருநாள் ஒரு கிராமத்தில் மரத்தடியில் வந்து அமர்ந்தார். அவருடைய வாய் பாகவத ஸ்லோகங்களையே முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

கிராமத்து பக்தர்கள் அவரிடம் ஸ்ரீமத் பாகவதம் கேட்க ஆசைப்பட்டார்கள். அதற்காக விதிப்படி நியம ஸன்யாசம் பெற்றுக் கொண்டார். பொதுவாக நியம ஸன்யாசம் பெற்றுக் கொண்டு, ஆஸ்ரமியாகி தண்ட-கமண்டலம், காவித்துணி எல்லாவற்றையும் விட்டு, பின், அதி-ஆஸ்ரமியாக ப்ரம்மேந்திராள் போல் போய்

விடுவார்கள். இங்கு ஒரு அதிசயம். அதிஆஸ்ரமியான அவர் நியம ஸன்யாசம் பெற்றுக் கொண்டார். ஏன் என்றால் பக்தர்களுக்கு பாகவதம் சொல்ல வேண்டும் என்ற ஆசையினால்தான். அவரை யாராவது எங்கள் கிராமத்திற்கு வர வேண்டும் என்று அழைத்தால், அதற்கு அவர், "நான் என்ன பிழைப்பிற்கு அலைகிற ஸன்யாசி என்று நினைக்கிறாயா? ஸ்ரீமத் பாகவதம் கேட்பதாக இருந்தால் வருகிறேன்" என்பார். அப்படி கிராமம் கிராமமாக ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடத்தினார்.

ஒரு சமயம் அவர் ஸ்நானம் செய்யும்பொழுது ஒரு முதலை அவருடைய காலை பிடித்துக் கொண்டது. தண்ணீரில் இருந்தபடியே, அவர் கஜேந்திர ஸ்துதியைச் சொல்ல, அந்த முதலை சக்கரத்தால் அடிபட்டது போல் வெட்டுபட்டு இறந்தது. ஒருசமயம் அவர் பாகவத ஸப்தாகம் பிரவசனம் சொல்லிக் கொண்டிருக்கும்போது ஒரு நல்ல பாம்பு வந்து, அவர் அமர்ந்திருக்கும் பலகையின் அடியில் சென்று அமர்ந்துக் கொண்டது. பிரவசனம் முடிந்து எழுந்து பார்க்கும்பொழுது அந்த பாம்பு எங்கு போயிற்று என்றே தெரியவில்லை. இப்படி அவருடைய வாழ்க்கையில் பல அற்புதங்கள், ஆச்சரியங்கள்! இவருடைய இஷ்ட தெய்வம் நரஸிம்ஹ மூர்த்தி. அவர் நரஸிம்ஹ பக்தர் என்பதற்கு அடையாளமாக வைகாசி ஸ்வாதி அன்று அதாவது நரஸிம்ஹ ஜெயந்தி அன்று பிரதோஷ காலத்தில் ப்ரஹ்லாத ஸ்துதி படித்து முடித்த பிறகே விதேஹ கைவல்யம் அடைந்தார்.

டோங்கரே, மஹராஜ் சுகப்ரும்மம் போன்ற எவ்வளவு மஹான்கள் பாகவத பித்து பிடித்து வாழ்ந்துள்ளார்கள். இன்று ஸ்ரீ ஸ்ரீ அண்ணாவால் ஸ்ரீமத் பாகவதம் ஒவ்வொரு வீட்டிலும் புகுந்துள்ளது. கலியினுடைய கொட்டத்தை அடக்க ஸ்ரீமத் பாகவதமே சிறந்த உபாயம். கலிபுருஷன் பார்த்தான். இந்த ஸ்ரீமத் பாகவதம் நம்முடைய கொட்டத்தை அடக்குகின்றது என்பதை பார்த்து, மெதுவாக ஸ்ரீமத் பாகவத க்ரந்தத்தையே மறைத்து விட்டான். ஸம்சாரிகளுக்கு பெண்ணுக்கு கல்யாணம், பையனுக்கு வேலை

போன்ற கவலைகள் எப்படி உண்டோ, அதேபோல் சாதுக்களுக்கும் கவலை உண்டாம். என்ன கவலை அது? உலகம் இப்படி போய்க் கொண்டிருக்கின்றதே என்ற கவலை தான் அது. ஜனங்கள் தர்மத்தில் இல்லையே என்ற கவலைதான் அது. அப்படி கவலைப்பட்ட பூபதேவர் என்ன செய்வது என்று யோசித்தார். தென்னிந்தியாவில் அழகர்மலை என்னும் திருமாலிருஞ்சோலை உள்ளதே அது தவம் இயற்றுவதற்கு ஏற்ற இடம். அங்கு சென்று அமர்ந்து, மூன்று வேளை நூபுர கங்கையில் நீராடி, ப்ராணாயாமம், துவாதஸாக்ஷரி ஜெபம், காய்ந்த இலைகளே ஆகாரம் என்று இருந்து தவம் செய்தார். அவருடைய தவத்திற்கு அழகன் மயங்கி அவர் முன்பாகத் தோன்றி, 'என்ன வரம் வேண்டும்' என்று கேட்டான். அவர் 'கலியினால் பீடிக்கப்பட்டுள்ள மக்கள் அதர்மத்தில் செல்கின்றார்களே இவர்களை தர்மத்தில் செல்ல வைக்க என்ன வழி?' என்று கேட்டார். அதற்கு பகவான், "ஒரே உபாயம் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம்தான். ஸ்ரீமத் பாகவதத்தை கலிபுருஷன் மறைத்துவிட்டான். நீர் உடனே ப்ருந்தாவனம் சென்று யமுனை கரையில் இங்கு தவம் இயற்றியது போல் சுகரை நோக்கி தவம் இயற்றும். அவருடைய க்ருபையால் உமக்கு பாகவதம் கிட்டும்" என்று உபாயம் கூறி மறைந்தார்.

ஆலங்குடி ஸ்வாமிகள் கிராமம் கிராமமாக ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடத்தினார்.

அதுபோலவே அவர் யமுனை கரைக்குச் சென்று ஸ்ரீ சுகரை நோக்கித் தவம் இயற்ற, ஸ்ரீ சுகர் அவர் முன்பு தோன்றி ஸ்ரீமத் பாகவதம் அருளினார். பூபதேவர் தான் மறைந்த ஸ்ரீமத் பாகவதம் நமக்கு இன்று கிடைக்க காரணமானவர். ஸ்ரீமத்பாகவதத்தை சங்கரர் பாஷ்ய க்ரந்தங்களில் கையாளவில்லை என்று சிலர் கூறுவார்கள். ஆனால் அவருடைய குருவான, கோவிந்த பகவத்பாதாளுடைய குருவான கௌடபாதர், தன்னுடைய பாஷ்ய க்ரந்தங்களில் ஸ்ரீமத் பாகவதத்தை கையாண்டிருப்பதை வித்வான்கள் அறிவார்கள்.

- (கனியும்)

## ஸ்ரீ திரிவேணிகிரி ஸ்வாமிகள்

நன்றி–"ஞான இன்பவெளி"
(திருக்கோவிலூர் தபோவன வெளியீட்டில் வந்த பிரசுரம்)

(ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் சன்னியாசம் பெற்றுக் கொண்டவர்களில் உபாசனை மார்க்கமாக வந்தவர், ஸ்ரீ திரிவேணிகிரி ஸ்வாமிகள். இவர் ஸ்ரீ வைகுண்டத்தில், ஸ்ரீ சங்கர நாராயண ஐயருக்கும்-பார்வதி அம்மாளுக்கும் புதல்வராய்ப் பிறந்து சுந்தரம் ஐயர் என்ற பெயருடன் பூர்வாசிரமத்தில் சிறந்த தேவி உபாசகராக இருந்தவர். இவர் தமக்கு குருநாதர் வாரி வழங்கிய அருளைப்பற்றி தமது அனுபவ உரையில் விவரித்துள்ளார். இதுவரை பிரசுரிக்கப்படாத அவருடைய அந்த குறிப்பின் சில முக்கிய பாகங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.)

ஸ்ரீ சுந்தர ஆர்யா ஸ்ரீ ரமண பகவானிடமிருந்து அனுமதி பெற்று 1933ல் ஸ்ரீ ரமணாச்ரமம் அடைந்து அங்கு தொண்டு புரிந்து கொண்டு ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டுக் கொண்டு வந்தார். காயத்ரி உபாசனை செய்ய வேண்டுமென்ற தோற்றம் அவருக்கு அடிக்கடி தோன்றி தியானத்திற்கு இடைஞ்சலாக இருந்தது. பகவானிடம் இந்த விஷயத்தைத் தெரியப்படுத்தியதும் அவர் 'காயத்ரியை மானசீகமாகப் பிராணோட்டத்துடன் அர்த்தானு சந்தான பூர்வமாய் செய்து வந்தால், ப்ராணன் மந்த்ர மயமாகி, ஆத்மாவில் கரைந்துவிடும். அது சுற்று மார்க்கமாயிருந்தாலும் உன் ஸம்ஸ்காரத்திற்கப் பரிகாரமாகிறது. எளிதில் ஆத்ம விசாரமும் கூடும். மனம் உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தலே நேரான ஞானமார்க்கம்' என்று அருளினார். அப்படியே ஒன்றரை வருட காலம் காயத்ரி புரஸ்சரணம் செய்தபின், சித்தலிங்க மடத்தில் ஸ்ரீ ஞானனானந்த குருநாதரின் ஆச்ரமத்தில் இதற்கு மிகவும் தோதாய் இருக்குமென்றும் அங்கு வருவதற்கும் உத்திரவு கிடைத்திருப்பதாகவும் ஸ்ரீ பகவானிடம் தெரிவித்தபோது ஸ்ரீ ரமண பகவான் 'ஆஹா, போகலாமே, உத்தமம் தான், நாம ரூபம்தான் வேறே தவிர, நாங்களிருவரும் ஒருவரேதான்' என்று சாந்தமாய்ப் புன்முறுவலுடன் பதிலளித்தார்கள். அப்படியே 1935ல் ஆனி மாதம் ஸ்ரீ குருநாதரை

அடைந்து தாளில் அடிபணிந்து நின்றார். அப்போது குருநாதர் 'ஆஸ்ரமத்தில் தபஸ் செய்வதற்கென்றே கட்டிடம் உருவாகியிருக்கிறது. வேண்டுவதுபோல் செய்து கொள்ளலாமே' என்று ஆக்ஞாபித்தார்கள். ஆகாரத்திற்கும் வகை செய்தார்கள்.

"இப்படியாக இரண்டு மாத காலம் இரவும் பகலுமாக விதிப்படி காயத்ரி புரஸ்சரணையும், ஒழிந்த நேரங்களில் ஆத்ம விசாரமும் தொடர்ந்து அனுஷ்டானம் செய்து கொண்டே வந்தது மனதிற்கு நிரம்பவும் நிம்மதியாகவும் இருந்தது. திவ்ய தரிசனங்களும் தினம் தினம் கிடைத்து வந்தன. அவையாவன :- ஒருநாள் அதிகாலை காயத்ரி ஜபம் செய்துக் கொண்டிருக்கும்போது புருவ மத்தியில் அதி தேஜோமயமாக மஹா கணபதி ப்ரஸன்ன முக விலாஸத்தோடு காட்சியளித்தார். பிறகு இதுவே எக்காலத்திலும் தொடர்ந்து வந்தது. பிறகு ஒருநாள் லக்ஷ்மி ரூபமாய் காயத்ரி காட்சி அளித்தாள். வராபய முத்திரையோடும் புன்முறுவலோடும் ப்ரசன்னமாக நின்று கொண்டு, "உனக்கு என்ன வரம் வேண்டும், கேள்" என்று திருவாய் மலர்ந்தருளினாள். அதே சமயம் திடீரென்று ஸாதுவின் சிரஸின் மேல் அபய முத்திரையோடு இரு வலக்கரங்கள் இருக்கக் கண்டது. அசரீரியும் தோன்றிற்று, "குழந்தாய்! உருவத்தை எதிரிட்டு வரம் ஒன்றும் கேட்காதே", என்று ஆக்ஞை செய்தது. இறுதியில் இரு கரங்களும் மறைந்தன. ஒன்று ஸத்குரு ஸ்ரீமத் ஞானானந்தகிரி மஹராஜ் அவர்களுடையதும், மற்றொன்று பகவான் ஸ்ரீமத் ரமண மகரிஷிகளுடையதுமாக இருக்கக் கண்டு தெளிவு அடைந்தது. அதிலிருந்து பிரணவத்திற்கு அர்த்த விமர்சங்களும், காயத்ரியின் திரி பாதங்களுக்கு வேதோக்தமான அர்த்த பாவங்களும் சதுஷ்பதா காயத்ரிக்கு மகா வாக்யத்தின் உட்பொருளையும் உணர்த்திற்று. ஒருநாள் இரவு குருமஹராஜ் அவர்களை அணுகி, தோற்றங்களையும் மனதின் ஸ்புரிப்புகளையும் தெரியப்படுத்தியது. அதற்கு ஸ்ரீ குருநாதர் சந்தோஷமடைந்து, "அஸ்தி பாதிப்ரியம் நாம ரூபமாகத் தோன்றும். இவ்வுலகை, நாம ரூபத்தை நேதி செய்து, அஸ்தி பாதி ப்ரியமாகப் பார்க்கில் பரப்ரஹ்ம ஸ்வரூபம் ஒன்றே

எங்கும் உள்ளது". "பரத்தை மறைத்தது பார் முதல் பூதம்; பரத்தில் மறைந்தது பார் முதல் பூதம்" என்று வியாக்கியானம் செய்து 'த்ருக் திருச்ய விவேகம்' என்ற நூலை எடுத்து ஸாங்கோபாங்கமாக உபதேசித்து அருளினார்கள்.

இப்படியாக சில தினங்கள் கடந்தபின் ஒருநாள் த்யானம் செய்து கொண்டிருக்கும்போது "மனதை உள்முகமாக்கு, நானாரென நாடு, உன் ஸ்வரூபம் விளங்கும்," என்று ஹ்ருதயத்தில் ஒரு ஸ்புரிப்பு தோன்றிற்று. அநேகமாக ஸத்குரு நாதர் இந்த அடிமைக்கு இரவு 9.30 மணிக்கு மேல் தான் தரிசனம் கொடுப்பது வழக்கமாக இருந்தது. ஆகவே ஒரு நாள் இரவு அவரை அணுகி மனதில் தோன்றிய ஸ்புரிப்பை வெளியிட்டது. அதற்கு ஸத்குருநாதர் கருணை கூர்ந்து வியாக்யானம் செய்ததாவது, 'அந்தக்கரண உபாதியோடு கூடிய சித் ப்ரதி பிம்பமே ஜீவன். மாயோபாதியோடு கூடிய சைதன்யமே ஈச்வரன். இரண்டு உபாதிகளையும் நீக்கினால் மிஞ்சுவது ஒரே சைதன்யமே. உமியோடு கூடியிருக்கும் வரை நெல் என்றும், உமி நீங்கினால் அரிசி என்னும் தெளிவு காண்பதாகும். ஆகவே ஜீவனே சிவன், சிவனே ஜீவன். "உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தலது கன்மம் பக்தியும் உந்தீபற, அது யோக ஞானமும் உந்தீபற," என்ற வாக்கியத்தை எடுத்து உரைத்து வியாக்கியானம் செய்தார்கள்.

அதாவது வெளிநாட்டத்தை விடுத்து மனதை உள்முகப்படுத்தி எண்ணம் உதிக்குமிடத்தில் மனதை லயப்படுத்திக் கொண்டிருந்தால், நாளடைவில் ரஜோ, தமோ குணங்கள் நசிக்கப் பெற்று சுத்த ஸத்துவம் எஞ்சி நிற்கும். எங்கும் நிறைந்த ப்ரும்ம சைதன்யம் சுத்த ஸத்துவ மனதிற்கு உள்ளது உள்ளபடி ஆவிர்பாவமாகும். இது சிவதரிசனம். ஸர்வத்திற்கும் சாக்ஷியாக விளங்கும் கூடஸ்த ப்ரும்ம ஸ்வரூபமே தனக்கு ஆதாரத்தலைவனாகும். ஆகவே ஜீவன் உபாதியற்ற இடமே ஜீவத்தோற்றம். ஜீவத்தோற்றம் நசித்து ஆதாரத் தலைவனாம் அகண்ட ஸச்சிதாநந்த ஸ்வரூபம் என்று அபேதமாயறிந்து அடங்கு.

இவ்வண்ணம் நெடுங்காலம் உள்முகப் பயிற்சியினால் வாஸனாக்ஷயம், மனோநாசம் அடையப்பெற்று, தத்துவ ஞான முதிர்ச்சியால் பரப்ரும்மமாய் தீர்வாய், இதுவே நானார் எனும் விசாரத்தின் உண்மை கண்டு தெளிக' என்பதாம். இவ்விதம் "சித்தலிங்க மடத்தில்" 6 மாத காலம் இந்த அடிமை த்யான ஸமாதி பழகி வந்தது.

1935-ம் வருடம் கார்த்திகை மாதத்தில் குருதேவர் என்னை சிதம்பரம் போய் தபஸ் செய்யும்படி ஆக்ஞாபித்து "ஸ்ரீ நடராஜர் அனுக்ரஹம் செய்ய காத்துக் கொண்டிருக் கிறார்; போய் வரலாம்," என்று கட்டளையிட்டார். மறுநாள் மாலை விடையாற்றல் செய்து அனுப்பும் சமயம் என் மனம் கலங்கி தயங்கி நிற்கிற குறிப்பு அறிந்து "கவலை வேண்டாம்; கலங்காதே; 4 அடி உயரமும், 3 அடி சுற்றளவுமுள்ள உருவமாய் என்னைக் கருதாதே. உருவமாய், அருவமாய், அருவ உருவமாய், எல்லாவுமாய், அல்லவுமாய் நிற்போம். கருத்துக்கிசைந்தபடி, தக்க காலத்தில் உருவத்துடனும் தோற்றம் கொடுப்போம்; வேண்டுவன செய்வோம்; கலக்கம் விடுத்து தில்லையை மிதித்து, கருத்தில் நினைந்து கடுந்தபம் புரியட்டும்" என்று அருள்வாக்கு கொடுத்தனுப்பினார்கள். தேடும் சஞ்சலத்தை விடுத்து சித்தத்தை சிவன்பால் வைக்கவே அந்தக் கரணத்தில் அதே விக்ரஹம் நிற்கக் கண்டு அஹம் மகிழ்ந்து ஆனந்த வாரியில் மூழ்கி 'இது நம் ஸ்ரீமத் ஞானானந்த குருதேவரே,' என்ற நிச்சய உணர்வு கண்டு தெளிந்தேன்.அப்படியே சிதம்பரம் போய், காயத்ரீ ஜபம் தீவிரமாக அனுஷ்டானம் செய்துக் கொண்டிருக்குங்கால் அம்பாள் பிரசன்னமாய் "ஆரிய! ஸ்ரீ ராஜராஜேஸ்வரியை உபாஸனை செய்து வரக்கடவாய்" என்று கூறி தினம், தினம் ஒரு மாத காலமாக ஜபம் செய்யும் போதெல்லாம் விக்ஷேபம் கொடுத்து வந்தாள். அப்பொழுது கொஞ்ச காலமாக பரதேவதைக்கும் எனக்கும் வாக்குவாதம் உண்டாக, ஒரு சமயம் நான் அம்பாளை எதிர்த்து, "நான் உன்னை உபாஸனை செய்கிறதே என் விக்ஷேபம் நீங்கி மனம் ஏகாக்ரம் அடையத்தான். பிறகு

எதற்கு வேறு உபாஸனை? நான் ஞான குருவை அடைந்த பிறகு மந்திர உபதேசத்திற்கு வேறு காரிய குருவை அடைக்கலம் புகமாட்டேன். இது உறுதி. மறுத்துப் பேசி மறுபடியும் விக்ஷேபம் செய்தால் உன்னைச் சபிப்போம்", என்று கூறிய சமயம் அம்பாள் புன்முறுவலோடு மறுமொழியாக "உன் ஞான குருவே உன்னை நாடி வருகிறார் . உபதேசம் பெற்றுக்கொள்" என்று திருவாய் மலர்ந்துவிட்டு, அந்தர்தானமானாள். தியானத்திலிருந்து கண்ணை விழித்ததும் பக்கத்தில் ஒரு திவ்ய மஹா புருஷர் இருக்கக் கண்டு மஹானை வந்தனம் செய்து அடக்கமாய் அஞ்சலி செய்து பயபக்தியுடன் தலைவணங்கி நின்றேன். பெரியவாள் "முன்பு நீ விடைபெற்று சிதம்பரம் போகும்பொழுது அளித்த வாக்கை நிறைவேற்றவே இவண் வந்தோம். சமயம் இதுவே. அவசியம் ஸ்ரீவித்யை என்ற ப்ரஹ்ம ஸ்வரூபிண்யையை உபாஸிக்க வேண்டும். பெற்றுக்கொள்" என்று திருவாய் மலர்ந்தருளி என்னை நடராஜர் ஆலயத்திலுள்ள ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸந்நிதியில் இருத்தி மந்திரதீக்ஷை செய்து, அங்கேயே ஸஹஸ்ராவர்த்தி ஏகாக்ர சித்தத்தோடு, மானஸீகமாக ஜபம் செய்யும்படி ஆக்ஞாபித்தார்கள். ஆகவே கண்மூடி தியானம், ஜபம் செய்து முடித்து, கண் விழித்துப் பார்க்கவே மஹாபுருஷாளைக் காணவில்லை. கோயில் பிரகாரங்கள் மற்றும் வெளியிலும் எங்கும் தேடியும் அந்த திவ்ய விக்ரஹத்தைக் காண முடியவில்லை.

திற்க, பற்பல க்ஷேத்திரங்கள் சென்று, அங்கங்கே ஸ்ரீ வித்யையை அங்க உபாங்க ப்ரத்யங்க தேவதைகளுடனும், முறைப்படி அதற்கு வேண்டிய ஆவரண தேவதைகளுடனும், புரஸ்ச்சரண விதிப்படி ஜபம் செய்தும், இரவில் ஸ்ரீ சக்ர பூஜையும் சாங்கோ பாங்கமாகச் செய்தும், அங்கங்கே அநேக மஹான்களை தரிசனம் செய்தும், நாடிவரும் அன்பர்களில் உபாஸனை வேண்டி விரும்பும் பக்குவிகளுக்கு உபதேசம் செய்தும் 12 ஆண்டுகள் கடக்க, ஒரு சமயம் ஒரு வயோதிக நம்பூதிரி ஸந்நியாசியுடன் சித்தலிங்கமடம் ஆஸ்ரமத்திற்குச் சென்று 1948-ல் நம் குருதேவரை சந்தித்தோம். ஒரு பகல் முழுவதும்

தங்கினோம். அப்பொழுது என்னைத் தனிமையில் அழைத்து ஸ்ரீவித்யையின் பெருமையை உணர்த்தி 1936-ல் சிதம்பரத்தில் நானடைந்த பேற்றுக்குத் தாமே காரணம் என்றும் இதை அதிரகஸ்யமாய், அடக்கமாய் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், குருநாதர் என்னிடம் சூசகமாய்த் தொவித்தார்கள். ஆகவே என் அனுபவத்தில் கண்டது நம் குருநாதர் ஸ்ரீ வித்யையிலும் மற்றும் சகல கலைகளிலும் பூர்ண சித்தி பெற்ற மகான் என்பது நிச்சயம்.

சிதம்பரத்திலிருந்து வைத்தீஸ்வரன் கோயில் வந்தடைந்து, ஸித்தாம்ருத தீர்த்தக் கரையில் த்யானம், ஸமாதி பழகி வந்தது. அப்போது ஒரு நாளிரவு பால் போல் நிலவு ஒளி வீசிக்கொண்டிருந்தபொழுது, சுமார் 10 மணிக்கு அதி யௌவன ரூபத்தில் ஸ்ரீ பரதேவதை காட்சியளித்து "நாக்கில் இரண்டு அக்ஷரம் எழுதுகிறேன்," என்று அருள்வாக்கு கொடுத்துக் கொண்டிருக்கும்பொழுது நம் குருமஹராஜ்திருவுருவம் திடீரென்று தோன்றி "எந்த தேவதையிடத்திலும் வரம் கேட்காதே. நீ போகிற மார்க்கத்திற்குப் பெருந்தடை" என்று அனுக்ரஹித்து விட்டு மறைந்து விட்டார்கள். அதிலிருந்து இதற்கு அனேக தோற்றங்களும், காக்ஷிகளும், வாக்குகளும் அடிக்கடி கிடைத்து வந்தபோதிலும் குரு ஆக்ஞைப்படி அவை யொன்றும் லக்ஷியம் செய்யாமல் நடந்து வந்தது. இவ்விதமாக தக்க சமயங்களில் இந்த அடிமையை தடுத்தாட்கொண்டு, பகவான் புரிந்த லீலைகள் பல. இவ்வாறு 1965ஆம் ஆண்டு வரை ஸ்ரீவித்யா உபாசனை, தபஸ், மற்றும் க்ஷேத்ராடனம் குருநாதர் ஆக்ஞைப்படி செய்து வருங்கால், தபோவனத்தில் ஸ்ரீ குருநாதர் அடிக்கடி இவ்வடிமையை சந்நியாஸம் பெற்றுக் கொள்ளும்படி சொல்லாமற் சொல்லி வந்தார்கள்.

இவ்வடிமை மூன்று வர்ணமுடைய ஆடைகளை அணிந்து கொண்டிருந்ததைப் பரிகசித்து அம்மூன்றும் ஒரே வர்ணமாக வேண்டும் என்றும் அடிக்கடி கூறியதுண்டு. அப்போது 'வானப்பிரஸ்த ஆச்ரமத்தில் இவ்வடிமைக்கு எவ்வித குறைவும் இல்லையே, சந்நியாஸம் வேறு

அவசியந்தானா?" என்று விளக்கம் வேண்டி நின்ற, உபாசனையிலேயே லயித்து வந்த, இவ்வடிமைக்கு துரியாஸ்ரம தீக்ஷையைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குருதேவர் விளக்கி அருளினார்கள்.

"கர்மா அவசியந்தான். அது பஹிரங்க சாதனம், அந்தரங்க சாதனம் என இருவகைப்படும். பஹிரங்க சாதனம் என்பது நிஷ்காம்ய கர்மமும் உபாசனையுமே. விக்ஷேபம் நீங்கி, மனம் ஏகாக்ரம் அடைவதற்கே உபாசனையாம்; பஹிரங்க சாதனைத்வாரா உபாசனை மூலம் மனம் ஏகாக்ரம் அடைகிறது. ஏகாக்ரம் அடைந்த மனத்திற்கே சாதனா சதுஷ்டயம் கைகூடும். சாதனா சதுஷ்டய சம்பன்னனே அந்தரங்க சாதனமாம் ஞானத்துக்கு அதிகாரி. கற்பகோடி காலம் கர்மா இயற்றினாலும் கடைவழிக்கு வாராது. ஆகவே, உபாசனையை விடுத்து, கற்றதெல்லாம் மறந்து, வாசனாக்ஷயம் மனோநாசம் அடையப்பெறுவதற்கே அந்தரங்க சாதனமாம் ஞான மார்க்கம். 'ஞானாத் ஏவது கைவல்யம், ஞானத்தினால் தான் கைவல்யம் அடையப்படுகிறது அல்லவா? இதை உள்ளத்தில் பதிவு செய்து சர்வ கர்ம சந்நியாச பூர்வகமான ஞானப்பியாசத்திற்கு முதற்படியாக துரியாஸ்ரமத்தைத் தொடங்குவோம். தொடர்ந்து வேண்டுவன செய்து முடிப்போம். துரியாஸ்ரமம் மேற்கொள்ள கொஞ்சம் கர்மா தேவை. விவிதிஷா சன்யாஸிக்கு ஸ்ரார்த்தாதி வ்ரஜாஹோம கர்மாதிகள் பூர்வாங்கமாக விதிக்கப்பட்டுள்ளன. பூர்வ கர்ம வசத்தால் ஈசுவர நியதிப்படி ஏற்பட்ட கர்ம பந்தத்தை தீவிர கர்மா என்ற மற்றொரு கட்டின்மூலம் தளர்த்தி பின் இரண்டையும் நழுவ விட வேண்டும். அழுக்கை அழுக்கால் போக்கவேண்டும். உள்முகம் கொண்டவனுக்கே ஞானத்துக்குப்ப்ராப்தி."

மேற்கண்ட மொழிகளால் இவ்வடிமை ஒருவாறு தெளியவே 1965 மாசி மாதம் மகாசிவராத்திரிக்கு முன் தினம் ஸ்ரார்த்த வ்ரஜாஹோம கர்மாதிகள் முடித்து மகாசிவராத்திரியன்று சாஸ்திர

முறைப்படி ப்ரேக்ஷோச்சாரணாதிகள் ஆன பின் ஸத்குருவால் 'திரிவேணிகிரி' என்ற தீக்ஷாநாமமும் மஹாவாக்கிய உபதேசமும் கிடைக்கப்பெற்று துரியாஸ்ரமம் மேற்கொள்ளப்பட்டது.

சந்நியாசம் கொடுக்கும் முன்பு குருநாதர் உபதேசம் அருளியபோது சச்சிதானந்தம் என்ற ஸ்வரூப லக்ஷணத்தை விளக்கி அனிர்வசனீய மாயையின் ஆவரண, விக்ஷேப சக்திகளின் சாமர்த்தியத்தையும் கூறி மேலும் கீழ்க்கண்டவாறு தொடர்ந்தார்.

"ஈசுவர கிருபையால் அந்தர் முக நாட்டங்கொண்டு, நிஷ்காம்ய கர்ம உபாசனையால் மலபரிபாகம் அடைந்து சாதனா சதுஷ்டய சம்பன்னனாகி, ஞான குருவை அடைக்கலம் புகுந்த சிஷ்யனுக்கு குரு மிகுந்த தயவோடு உபதேசிப்பது என்னவென்றால் சச்சிதானந்தமாகிய உன் சொரூபத்தை மறைப்பது அவித்யை. மனம் அதன் காரியம். அந்த மனமே மனிதனை அலைக்கழிக்கிறது. உள்நாட்டங் கொண்டு விசாரித்தால் மனம் என்ற பொருளே இல்லை என்பது தெரியும். ஹிருதயத்தில் மனமற்ற இடத்தில் ஜீவனே சிவனாகிறான். உடல், பொருள், ஆவி உள்ளன்போடு ஆன்ம சமர்ப்பணம் செய்கின்ற பக்குவி முடிவில் பூர்ண கிருபைக்கு (அருளுக்கு) ஆளாகிறான். ஈசுவர சக்தியையே அருள் சக்தி என்றும், பராசக்தி என்றும், ஸ்ரீ வித்யை என்றும் உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. அந்த சக்தியை உபாசித்துப் பரிபக்குவம் அடைந்த சிரேஷ்டனுக்கு, அவள் அருளால் அஞ்ஞானத் திரை நீக்குங் காலம் அடுத்து நிற்கிறது. அவளாகவே ஸ்ரீ வித்யாரூபிணியே ஞானகுருவாக உருவெடுத்துக் காட்சியளிக்கிறாள். குருவின் ஆக்ஞையால் உபாசனை விடுத்து, குருவின் கருணையால் துரியாஸ்ரமமும் மகாவாக்கிய உபதேசமும் பெறுகிறான். அனுபவ ரூபமான குருவின் சப்த ஜன்ய ஞானத்தை ஸ்ரோத்திர வாயிலாய் மடுத்து, நெடுங்காலம் அந்தர்முக நாட்டத்தால் நிதித்யாசனம் செய்து அனேக காலம் சமாதி பழகி தத்வ ஞானம், வாசனாக்ஷயம், மனோநாசம் அடையப் பெற்று உபாதி உணர்வு நீக்கத்தால் ஜீவனே சிவனாகிறான்."

# பாலகர்களுக்கு ஒரு கதை



'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்று சொல்லுவர். 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பர். 'இளமையில் கல்' என்பர். இவை அனைத்தும் பெரியோரின் வாக்கு. சிறு வயதில் எதை நாம் கற்றுக் கொள்கிறோமோ அதுவே தான் பிற்காலத்தில் வளரும்பொழுது நமக்கு வரும். இதையேதான் 'தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்' என்றனர்.

சிறு வயதிலிருந்தே காபி அருந்தும் பழக்கம் உள்ளவர், வயதானபின் அதை தவிர்க்க முடியாது. சிறு வயதில் எதையும் கவனித்து பொறுமையுடன் செய்ய பழகுவோம் என்றால், வாழ்வில் அது நமக்கு பெரும் துணையாக இருக்கும். நாளை ஒரு மனிதன் எப்படி வாழ்வான் என்பதை அவனது இளமைக்காலத்தை வைத்து ஒரளவு சரியாகவே சொல்லி விடலாம்.

மட்டைப்பந்து விளையாடி அதில் முதன்மை பெற ஆசைப்படும் ஒருவன், சிறு வயதில் விளையாட பழகாவிடில், வயது வந்தபின் விளையாட முடியுமா? முடியாது. குணங்களும், பழக்கங்களும் சிறு வயதிலேயே கற்றுத் தரப்பட வேண்டும். அதுபோல் நாமும் நல்ல பழக்கங்களையே பழகவும் வேண்டும்.

ஒரு சிறுவன் படிப்பில் கவனம் குறைந்து, கேளிக்கைகளில் அதிக நாட்டம் செலுத்தி வந்தான். அவன் பெற்றோர் அவனை செல்லம் கொடுத்து வளர்த்து வந்தனர். பெற்றோர் சிறுவனுக்கு நல்ல போதனைகளை எடுத்துச் சொல்லவில்லை. அவர்கள் சிறுவனின் எதிர்காலத்தை குறித்து சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லை.

அந்த சிறுவன் சிறு சிறு தவறுகளை செய்யும்பொழுது கண்டிக்காமல், அதைப் பொருட்படுத்தாது இருந்தனர். ஒரு முறை, சிறுவன் தனது நண்பனிடமிருந்த ஒரு பொருளை அவன் அறியாதபடி திருடி விட்டான். அதை தனது தாயினிடம் கொண்டு வந்து

கொடுத்தான். அவளிடம் "தான் எப்படி சாமர்த்தியமாக திருடினேன்" என்று சொல்லி பெருமையடித்துக் கொண்டான். தாய் இதை கண்டித்திருக்க வேண்டும். அவள் தன் மகன் சாமர்த்தியமாக செயல்பட்டதாக நினைத்து ஆனந்தப்பட்டாள். செய்தது தவறு என்று உணர்ந்தாலும், அதை எடுத்துச் சொல்லாமல், அவனுடன் சேர்ந்து சிரித்தாள். வழக்கம் போல் உண்டு விட்டு, இருவரும் உறங்கி போயினர். நாளடைவில், அடிக்கடி சிறுவன் திருடி வர ஆரம்பித்தான். பொருட்களின் மதிப்பு குறைவாக இருந்தபடியால், தாய் மகனின் செயலை, வழக்கம்போல் அலட்சியம் செய்தாள்.

இப்பொழுது சிறுவனுக்கு தான் செய்வது தவறு என்றே தோணுவது கிடையாது. சாமர்த்தியமாக திருடுவது புத்திசாலித்தனம் என்றே எண்ணினான்.

ஓரிரு வருடம் கழிந்தபின், ஒரு பெரிய திருட்டை செய்தான். அவன் அப்பொழுது கையும், களவுமாக மாட்டிக் கொண்டான். இதைத்தான் 'பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்' என்பர் பெரியோர். இப்பொழுது சிறுவனுக்கு திருட்டுப்பட்டம் வந்தது. காவலர் அவனை கைது செய்து, நியாயஸ்தலம் கொண்டு சென்றனர்.

நீதிபதி வழக்கை விசாரித்தார். சிறுவன் தவறை ஒப்புக் கொண்டான். வயதிலோ சிறியவன். திருடியதோ மிகப்பெரிய பொருள். கடும் தண்டனை கொடுத்தால் தான் சிறுவன் திருந்துவான் என சரியாக எண்ணிய நீதிபதி, கடுமையான தண்டனை விதித்தார்.

சிறுவன் அதிர்ந்து போனான். ஆயினும், தனது தாயாரை தனியாக பார்த்து பேச வேண்டுமென ஆசைப்பட்டான். நீதிபதியும் அதற்கு அனுமதித்தார். ஏதோ ரகசியம் பேசுவது போல் சென்றவன், அவள் காதை கடித்து விட்டான். அவள் அலறினாள். எல்லோரும் பதறி போய் சிறுவனை விலக்கி அடிக்கப் போனார்கள்.

நீதிபதி அவனை நோக்கி, "ஏன் இப்படி செய்தாய்? உன் குற்றத்திற்கு நீ தண்டனை அனுபவிப்பதுதானே சரி" என்றார்.

சிறுவன் அழுதவாறே, "என் தாய் நான் முதல் குற்றம் செய்தபொழுதே கண்டித்திருந்தால், இப்பொழுது பெரிய திருட்டு செய்து அகப்பட்டிருக்க மாட்டேனே. தவறு அவளிடம் உள்ளது" என்றான். அவனுடைய வார்த்தையை நன்கு ஆராய்ந்த நீதிபதி, அதில் உண்மையும் உள்ளது என்பதை அறிந்தார். அவனுக்கு மன்னிப்பு வழங்கி, விடுதலை செய்தார். சிறுவனும் மறுபடி திருட்டில் ஈடுபடுவதே இல்லை என முடிவெடுத்து அதன்படியும் வாழ்ந்தான். ஆனால், தாயாருக்கு "திருடனுக்கு தேள் கொட்டியது" போல் இருந்தது. திருட வந்த இடத்தில் தேள் கொட்டினால், என்ன ஆகும். திருடன் அலறுவான். அப்புறம் என்ன? மாட்டிக் கொள்வான். அப்படித்தான் இங்கும். சிறுவன் உண்மையை சொல்லப்போக, தாய்க்கு மிக்க அவமானமாக இருந்தது.

"என் தாய் நான் முதல் குற்றம் செய்தபொழுதே கண்டித்திருந்தால், இப்பொழுது பெரிய திருட்டு செய்து அகப்பட்டிருக்க மாட்டேனே. தவறு அவளிடம் உள்ளது" என்றான்

ஆதலால் குழந்தைகளுக்கு நற்பண்புகளை இளமையில் கற்றுத்தருவது அவசியம்.

விதி ஒரு மனிதனிடம் செயல்பட வேண்டும் என்றால், அது அவனுடைய அறிவு, மனது, 'நான்' என்ற அகங்காரம் ஆகிய மூலமாகத்தான் செயல்படவேண்டும். எவன் ஒருவன், தன் அறிவை நம்பாமல் பரமாத்மாவின் அறிவை மட்டுமே நம்புகின்றானோ, மனதை பரமாத்மாவிடமே கொடுத்து விடுகின்றானோ, 'நான்', 'நான்' என்றிராமல் 'இறைவன், இறைவன்' என்றிருக்கின்றானோ, அவனிடம் விதி விளையாடுவது என்பது செத்த பாம்பை அடிப்பதற்கு சமமே ஆகும்.

- ஸ்ரீ ஸ்வாமிஜி

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

ராதாரமணர் சிகிச்சைக்காக கல்கத்தா செல்ல வேண்டியதாயிற்று. அங்கு அவரை மருத்துவமனையில் சேர்க்கும் அளவிற்கு நிலைமை மோசமாகிவிட்டது. 45 நாட்கள் தொடர்ந்து வைத்தியம் செய்யப்பட்டது. அவருடைய தம்பி ஸசீதுலால் மற்றும் இன்னொரு உறவினர் பெண் அவரை இக்காலத்தில் நன்கு கவனித்துக் கொண்டனர். ஆனால் ராதாரமணருடைய நிலையோ மோசமாகிக் கொண்டேயிருந்தது. சாப்பிடுவதும் முழுவதுமாக நின்றுவிட்டது. மூக்கின் வழியாக உணவு அளிக்கப்பட்டது.

ஒரு நாள் மாலை வேளையில் வயிற்றுவலி மிகவும் அதிகரித்துவிட்டது. மருத்துவர்கள் அவர் அருகிலேயே நின்றபடி - "இன்று இரவே உயிர் போனாலும் போய்விடலாம்" என்று பேசிக் கொண்டார்கள். இது பாபாவின் காதுகளில் விழுந்துவிட்டது. மரணத்தை நினைத்து அவர் பயப்படவில்லை. ஆனால் 'ப்ருந்தாவனத்தில் அல்லாது கல்கத்தாவில் ஏதோ ஒரு மருத்துவமனையிலா என் உயிர் பிரிய வேண்டும்' என்று எண்ணி மிகவும் வருந்தினார்.

மிகவும் உருக்கமாக அவர் ராதாராணியிடம் ப்ரார்த்திக்கலானார். 'ஹே ஸ்வாமினி! தயாமயி! ஒரு நாயைப்போல நான் இங்கு இறக்கப்போகிறேன். என்னை ஏன் ஸ்ரீவனத்திலிருந்து வெளியேற்றினாய்? உனக்கு நான் ஏதோ அபராதம் செய்திருக்கிறேன். இல்லையெனில் கருணையே நிறைந்துள்ள நீ இவ்வாறு செய்வாயா? எனக்கு தர்சனம் அளிக்காவிட்டாலும், சரண-ஸேவைக்காக என்னை அங்கீகரிக்காவிட்டாலும், ப்ருந்தாவனத்தில்தான் என் உயிர் பிரிய வேண்டும் என்ற அனுக்ரஹத்தையாவது எனக்கு செய்ய வில்லையே?

அதற்கு கூட எனக்கு யோக்யதை இல்லை என்று நினைத்து விட்டாயா? நான் அதற்கு தகுதியுள்ளவனோ, தகுதியில்லாதவனோ, நான் உன்னைச் சேர்ந்தவனல்லவா? உன்னுடையவன் அல்லவா?

நான் பஜனை செய்வது போல் நடித்திருந்தாலும், உன்னை பஜனை செய்வது போல் தானே நடித்திருக்கிறேன்? ஏமாற்றுவதற்கு உனது பெயரை கூறுபவர்களை கூட நீ காப்பாற்றி விடுவாயே! எனக்கு மட்டும் ஏன் இந்த நிலை? இந்த தீனன் மீது தயை புரிவாய், ஸ்வாமினி!" என்று கூறிக்கொண்டே அவர் மூர்ச்சையடைந்தார்.

பக்தவத்ஸலையான ராதைக்கு இவரின் அலறல் காதுகளில் விழாதா என்ன? ராதை நடுங்கி அங்கு ஓடிவந்து விட்டாள். கண்ணனும் அவளுடன் வந்துவிட்டான். இருவரும் பாபாவிற்கு தரிசனமளித்தனர். ராதை பாபாவிற்கு அபயம் அளிக்கும் பொழுதே க்ருஷ்ணன் அவரது வயிற்றின் மேல் கையை தடவியபடியே 'குழந்தாய்! எங்கு வலிக்கிறது? சொல்' என்று கேட்டான். பகவானின் கை பட்டவுடனேயே வயிற்று வலி, இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. வலியுடன் கூட ராதா-க்ருஷ்ணரும் மறைந்துவிட்டார்கள்.

மறுநாள் காலை அவரை பரிசோதித்த மருத்துவர்களின் ஆச்சரியத்திற்கு ஒரு அளவே இல்லை! நேற்றுவரை மூக்கு வழியாக ஆகாரம் உள்ளே சென்றுக் கொண்டிருந்தவர், மரணத்தின் வாயிலுக்கே சென்று விட்டவர், இன்று எழுந்து உட்கார்ந்து கேட்டு கேட்டு வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

பாபா நல்ல உடல் நலம் பெற்று விஹார வனத்திற்கு திரும்பி, பஜனை செய்ய ஆரம்பித்துவிட்டார். அவருடைய உடல் வ்யாதி போனபோதிலும், ப்ரேம வ்யாதி அவரை பீடிக்க ஆரம்பித்தது.ராதா க்ருஷ்ணரின் தரிசனத்திற்குப் பிறகு விரஹாக்னி பெருகிவிட்டது. இச்சம்பவத்திற்கு பின் ராதா-க்ருஷ்ணரிடம் அவருக்கு 'என்னுடையவர்கள்' என்ற மமதை மிகவும் பெருகிவிட்டது. மற்ற யாரை விடவும் நமக்கு இவ்வளவு நெருக்கமாக இருக்கும் இவர்கள் மற்ற யாரை விடவும் தொலைவில் இருப்பதை, நினைத்து நினைத்து அவரது ஹ்ருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. (தொடரும்)

## மாலே மணிவண்ணா – 67

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

தன்னை எல்லோரும் புகழ வேண்டும்; தன்னைத் தவிர வேறு யாரையும் யாரும் புகழக்கூடாது என்பது ஒன்றே இரணியன் குறிக்கோள். புகழ் தானாக வரவேண்டும். பிறரைக் கூறச் சொல்லி வருதல் கூடாது. தம் நற்செயல்களால், அருள் உள்ளத்தால் உலகம் தானாக முன் வந்து தன்னைப் புகழ்வது தான் வெற்றி எனப்பெறும். அவ்வாறன்றி இரணியனைப் போல கூறுவித்துக் கோடல் வெற்றியன்று என்பதைத் தொல்காப்பியப் புறத்திணையியல் வாகைத்திணை இலக்கணம் கூறும் நூற்பாலில், நச்சினார்க்கினியர் உரைத்த உரையால் அறியலாம்.

"தாலில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல்" (தொல். பொருள், புறம் 73)

வாகை என்பர் தொல்காப்பியர். தா இல் கொள்கை - வலியும் வருத்தமும் இல்லாத கொள்கை. பிறரைத் துன்புறுத்தி வலிமையால் தன் கொள்கையைத் திணித்தவன் இரணியன். அவனுக்குத் தன்னைத் தவிர வேறு யாரையும் புகழ்வது பொறுக்காது.

சீல குணங்களால் தன் ஒப்பார் இல்லாத பெருமானின் திருநாமங்களை, பெருமையைச் சொல்லச் சொல்ல, இரணியனுக்குச் சீற்றம் பொங்கியது; சினத்தீயால் அவன் நெஞ்சம் புகைந்தது; அவனது மார்பில் பூசியிருந்த சந்தனம் உள்ளே கனன்ற சின நெருப்பினால் புலர்ந்து பொடிப் பொடியாய்ச் சிதறியது. தன் ஏவலர்களை அனுப்பிப் பலபல பிணிகள் - துன்பங்கள் செய்தான். சிறுவன் பிருங்கலாதனை (பரிபாடல் பிரஹ்லாதனைப் பிருங்கலாதன் எனத் தமிழ் வழக்கிற்கேற்ப அழைக்கிறது) அம்பு, வேல், மழு, கூரிய வாள் இவற்றால் எறிந்தார்கள், எய்தார்கள், எற்றினார்கள், குத்தினார்கள், வெட்டினார்கள். ஆயுதங்கள் வீணாயினவே தவிர சொறிந்து விட்ட தன்மையைக் கூட அந்த ஆயுதங்கள் பிருங்கலாதனுக்குச் செய்யவில்லை.

நெருப்பில் தள்ளச் சொன்னான் இரணியன். பெரு நெருப்பு மூட்டி எண்ணெய், இழுது நெய் சொரிந்து மேல் எழும்பிய தீயிடைப் பெய்தார்கள். அரிதிரு நாமம் இடையறாது சொல்லும் சிறுவனுக்கு எரியும் குளிர்ந்தது.

எட்டுப் பாம்புகளையும் சிறுவன் மேல் விடச் செய்தான். பாம்பின் பற்கள் சிதறி விழுந்தன. திக்கு யானைகளினிடமாகப் பிருங்கலாதனை இட்டு மிதிக்கச் செய்யுங்கள் என்றான் இரணியன். யானை தொழுது நீங்கியது.

இவ்வாறு பலபல பிணிகள் செய்தான். பிணிகளால் பிணித்துத் துன்புறுத்தினான். அறியாது அவன் செய்யும் துன்பங்களால் அவனுக்கே கேடு சூழ்கிறானே இரணியன் என்று தன் தந்தைக்கு இரங்கிய நோயால் நடுக்கத்தை உடைய பிருங்கலாதன் தனக்குத் துன்பம் செய்பவன் தன் தந்தை. ஆகையால் அவனை இகழாமல் இகழப்படுவோனுக்கும் இரங்கும் நெஞ்சினை உடையவனாக ஆனான்.

பிருங்கலாதன் தன்தந்தை என்பதால் இகழாமல் இருந்தானாகவும், தன் பக்தனுக்குத் துன்பங்கள் பல தொடர்ந்து செய்த காரணத்தால் பகவான் இரணியனை இகழ்ந்தார்.

தன்பால் பேரன்பு செய்த பிருங்கலாதன் வருந்தாமல் அவன் மனத்தில் பொருந்தி நின்றான். தன்பால் முன்பு தவம் செய்து வரம் பெற்ற இரணியனது மலை போலும் மார்பில் பெருவலி கெடும்படியாகச் சென்று துன்பத்தைக் காட்டும் நிமித்தங்கள் உண்டாக, இடிபோல முரசு ஆரவாரம் செய்ய, தூணிலிருந்து வெடித்துப் புறப்பட்டான் பெருமான். வெடித்து விழுந்த தூணின் பிளப்புகளைப் போல பெருமானால் வெட்டப்பட்ட இரணியன் உடம்பின் தசைத்தடிகள் பல பல எங்கும் சிதறின. இப்படி இரணியன் உடம்பைப் பல கூறுகளாகக் கீறிய நகத்தை உடையாய்! என்று எம்பெருமானைத் தோத்திரம் செய்கிறது பரிபாடல்.

(தொடரும்)

## அக்ஷரமணமாலை

ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து – 151

நோக்கியே கருதி மெய் தாக்கியே பக்குவமாக்கி

நீ ஆண்டருள் அருணாசலா

தொட்டு அருளுதல், அருட்கண்ணோக்கல், கருதுதல் ஆகிவற்றின் மூலமாய் குருவானவர் சீடனுக்கு ஞானத்தை அளிக்க முடியும். கண் முன்னால் இல்லாத சீடனுக்கு குரு அருள நினைத்தால் அதை சர்வ சுலபமாய் நினைப்பதினாலேயே கொடுக்க முடியும். இதுவே இங்கு 'கருதி' என சொல்லப்படுகிறது. இதற்கு ஆமையே உதாரணம். ஆமையானது கரையில் முட்டையிட்டு விட்டு, கடலுக்கு சென்று விடும். நீரிலிருந்தவாறே, முட்டையை பற்றி நினைத்துக் கொண்டிருக்கும். அதனால் முட்டைகள் பொறிந்துவிடும்.

ஆதி சங்கரரிடம் கிரி எனும் சீடன் மிகவும் அன்புடன் சேவை செய்து வந்தான். அவனுக்கு வேதாந்த பாடம் தெரியாது. சங்கரர் எப்படி பேசுகிறார், அவருக்கு வஸ்திரம் எப்படி அழகாய் உள்ளது, அவர் குரல் எவ்வளவு கணீர் என்று உள்ளது என்றுதான் பார்த்தவாறு இருப்பான். சங்கரரின் வஸ்திரங்களை ஒரு ஸன்யாஸியின் ஆடைகள் தானே என அலட்சியமாக எண்ணாமல், சுத்தமாக துவைத்து வைப்பான். சங்கரரிடம் அலாதி ப்ரியம் அவனுக்கு. ஒரு நாள் சங்கரர் பிற சீடர்களுக்கு வேதாந்த பாடம் சொல்ல ஆரம்பிக்கும் முன், சற்றே தாமதித்தார். சீடர்கள், ஏன் தாமதிக்கிறீர்கள் என வினவ, சங்கரர் "கிரி இன்னும் வரவில்லையே" என்றார். இதைக் கேட்டவுடன் சீடர்கள் 'கொல்'லென்று ஒட்டுமொத்தமாய் சிரித்து விட்டனர். "இந்த கடின பாடங்கள் எங்களுக்கே புரியாதபொழுது, அவனுக்கு எப்படி புரியும்?" என்றனர். தன்னிடம் பிரியமாக உள்ள கிரியை இப்படி நினைக்கிறார்களே என தாபத்துடன் கருதினார் சங்கரர். அவ்வளவுதான்! அந்த தாபமே கருணையாக மாறி, அருள்சக்தியாக உருவெடுத்து, நதிக்கரையில் இருந்த கிரியை சென்றடைந்தது.

அவனுக்கு அந்த கணமே பூரண ஞானம் கைகூடியது. கரத்தாளம் போட்டவாறே 'தோடகாஷ்டகம்' எனும் அற்புதமான பாடலை பாடியவாறு வந்தான் அவன். சீடர்கள் பெரிதும் ஆச்சரியப்பட்டனர். கிரிக்கு தோடகாச்சார்யர் எனும் பெயர் வந்தது. பிறர் புத்தி பூர்வமாய் புரிந்து கொண்டதை, அனுபவத்தில் குரு அருள் கிரிக்கு கொடுத்தது.

காஞ்சி மஹாஸ்வாமிகள் ஒருமுறை காசிக்கு சென்றிருந்தபொழுது, அவரைப் பார்த்த ஒரு சன்யாசி, "நான் காசியை விட்டு எங்கும் வெளியில் செல்வதில்லை எனும் க்ஷேத்ர ஸன்யாஸம் வாங்கி உள்ளேன். ஆயினும், தங்களைப் போன்ற உயர்ந்த ஜீவன் முக்தரைப் பார்க்கும்பொழுது, அந்த சங்கல்பத்தைக் கைவிட்டு தங்கள் பின்னால் வர ஆசை உள்ளது" என்றார். காஞ்சி மஹாஸ்வாமிகளோ, "சங்கல்பத்தை விடக்கூடாது. சத்தியம்தான் முக்கியம். நீங்கள் எங்கிருந்தாலும், நான் தங்கள் அருகிலிருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். நானும் அவ்வண்ணமே நினைத்துக் கொள்கிறேன்" என்றார்.

இது நடந்து காஞ்சிபுரத்துக்கு வந்துவிட்டார் மஹாஸ்வாமிகள். ஒரு 60, 70 வருடம் கழித்து ஒருவர் மஹாஸ்வாமிகளிடம் (அது ஒரு செவ்வாய்கிழமை காலை 9 மணி) தான் காசி செல்ல உத்திரவு வேண்டும் என கேட்டார். மஹாஸ்வாமிகள் அருளிவிட்டு, காசியில் (முந்திய பாராவில் கண்ட ஸன்யாஸியை பற்றி செய்திகளைக் கூறி) "இப்படி ஒரு ஸன்யாஸி இருக்கிறார். சங்கர மடத்தில் கேட்டால், அவர் விலாஸம் கிடைக்கும். சென்று பார்த்து, நான் விசாரித்ததாகச் சொல்" என்றார். அந்த நபரும் காசிக்கு போய்விட்டு, மறுபடி மஹாஸ்வாமிகளிடம் வந்து விவரங்களைத் தெரிவிக்கும்பொழுது, "பெரியவர்கள் விசாரித்த அதே செவ்வாய் காலை 9 மணிக்கு அந்த காசி ஸன்யாஸி சித்தியாகி விட்டாராம்" என்றார். காஞ்சி மஹாஸ்வாமிகள் தனது நினைவினாலேயே அந்த ஸன்யாஸிக்கு முக்தியை அருளியிருக்கிறார். (தொடரும்)

## ஸ்ரீவண்புருஷோத்தமன் சன்னதி திருப்பணி– நாங்கூர்

நூற்றிஎட்டு திவ்யதேசங்களில், திருமங்கை ஆழ்வாரின் அவதார ஸ்தலத்தை சுற்றி உள்ள திவ்யதேசங்கள் மிகவும் முக்கியமானவை. திருமங்கை ஆழ்வார் அவதரிக்கவில்லை என்றால், நமக்கு இவ்வளவு



திவ்ய தேசங்கள் கிடைத்திருக்காது. சீர்காழி அருகில் உள்ள திருநாங்கூரை சுற்றி இந்த திவ்ய தேசங்கள் அமைந்துள்ளதால், இவை நாங்கூர் திவ்யதேசங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

பக்தர்கள் மற்றும் பாக்யவான்களான தனிகர்களின் துணைக்கொண்டு, அரிமேயவிண்ணகரம், திருமணிக்கூடம், செம்பொன்செய்கோவில், காவளம்பாடி, பார்த்தன்பள்ளி, கீழச்சாலை, திருவாலி திவ்யதேசங்கள், 1998இல் ஆரம்பிக்கப்பட்டு, நம்முடைய அறக்கட்டளையின் முயற்சியால், திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்குகள் கண்டருளின.

இந்த திவ்யதேசங்களில், மிகவும் முக்கியமான ஒன்று வண்புருஷோத்தமன் கோவில். இக்கோவில் தெய்வத்திரு.குழந்தைவேல் முதலியார் அவர்களின் திருக்குமாரரும், சென்னை சில்க்ஸ் நிறுவனத்தின் டைரக்டருமான திரு.நந்தகோபால் அவர்களால் திருப்பணி செய்யப்பட்டு, கடந்த செப்டம்பர்11 அன்று குடமுழுக்கும் செய்யப்பட்டது. அன்னாருக்கும் அவர் குடும்பத்தாருக்கும், இந்த பெரிய தர்மத்தில் பங்கு பெற்றதன் மூலம், எல்லா மங்களங்களையும், பகவான் புருஷோத்தமன் கொடுத்தருள்வாராக.

ஒரு சமயம் ஸ்ரீஸ்வாமிஜியிடம் ஒரு அன்பர் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது பேச்சு புலால் உணவை பற்றி வந்தது. பேசிக் கொண்டிருந்த அன்பர், "புலால் உண்பவர்கள் கருணையில்லாமல் உயிரினங்களைக் கொன்று உண்கின்றார்களே" என்றார்.

அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி சிரித்துக்கொண்டே 'நம்மைவிட ஜீவராசிகளிடம் அவர்களுக்குத்தான் கருணை அதிகம்' என்று கூறி சற்றே நிறுத்தினார்.

அந்த அன்பர் புருவங்களை உயர்த்தி 'அது எப்படி?' என்றார். அதற்கு ஸ்ரீஸ்வாமிஜி 'மனிதர்களுக்கு கூட நாம் பூமியில்தான் ஸமாதி கட்டுகின்றோம். ஆனால் புலால் உண்பவர்களோ அவர்களுக்கு விருப்பமான ஜீவராசிகளுக்கெல்லாம் வயிற்றில் அல்லவோ சமாதி வைக்கின்றார்கள்' என்று கூறி சிரித்தார்.

-சிவராமன்

| ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல் | |
|---|---|
| நவம்பர் 9,23 | ஏகாதசி – மதுரபுரி ஆஸ்ரமம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : 044-2489 5875,
Email : contact@namadwaar.org, contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.